# நியுஹம் நலவுதவிப் பணச் சேவையின் ஏழு அற்புதமானவை!

உங்களின் கோரிக்கையுடன் பின்வரும் ஏழு பத்திரங்களை நீங்கள் கொடுத்தால், முடியுமான மிகக் குறைந்த காலத்துக்குள் உங்களின் நலவுதவிப் பணக் கோரிக்கை கவனித்துக்கொள்ளப்படும் என நாங்கள் உறுதி அளிக்கின்றோம். நியுஹம் நலவுதவிப் பணச் சேவை (Newham Benefits Service)

1. **உங்களின் முற்றிலும் பூரணப்படுத்தப்பட்டு கைச்சாத்திடப்பட்ட கோரிக்கைப் படிவம்,**
   இதனுடைய அர்த்தம் நீங்கள் ஒவ்வொரு வினாவுக்கும் விடையளிக்க வேண்டும்.

2. **உங்களதும், மற்றும் உங்களுக்கு ஒரு துணைவர் இருந்தால் அவருடையதும் அடையாளம் பற்றிய சான்று.**

3. **உங்களதும், மற்றும் உங்களுக்கு ஒரு துணைவர் இருந்தால் அவருடையதும் தேசிய காப்புறுதி இலக்கம் பற்றிய சான்று.**

4. **உங்களதும், மற்றும் உங்களுக்கு ஒரு துணைவர் இருந்தால் அவருடையதும் வருமானம் பற்றிய சான்று.**

5. **உங்களுடன் வசிக்கும் வேறு எவரதும் எல்லா வருமானமும் பற்றிய சான்று ( உங்களின் பிள்ளைகள் அல்லது, உதாரணமாக ஒரு வயதுவந்த மகன் அல்லது மகள் அல்லது வேறு உறவினர் அல்லது நண்பர் உட்பட).**

6. **வங்கி அல்லது பில்டிங் சொசயிட்டி நடைமுறைக் கணக்குகள் உட்பட, நீங்கள், உங்களின் துணைவர் அல்லது உங்களின் பிள்ளைகள் வைத்திருக்கும் ஏதாவது சேமிப்புக்கள், முதலீடுகள், இருப்புகள் (stocks) , பங்குகள் (shares) , சொத்து அல்லது வேறு மூலதனம் பற்றிய சான்று.**

7. **நீங்கள் ஒரு தனிப்பட்ட வீட்டுச் சொந்தக்காரருக்கு அல்லது ஒரு ஹவுசிங் அசோசியேசனுக்கு வாடகை செலுத்துவதாக இருந்தால், உங்களின் வாடகை பற்றிய சான்று.**

உங்களின் கோரிக்கைக்கு ஆதரவாக நீங்கள் எங்களுக்குக் கொடுக்கின்ற ஒவ்வொரு பத்திரமும் ஒரு மூலப் பத்திரமாக இருக்கவேண்டும் என்பதைத் தயவுசெய்து நினைவுகொள்ளவும். இதனுடைய அர்த்தம் நாங்கள் போட்டோ பிரதிகளை ஏற்றுக்கொள்ளமாட்டோம். ஆனால், தற்போது உங்களிடம் எல்லாச் சான்றுகளும் இல்லாவிட்டாலும் உங்களின் கோரிக்கைப் படிவத்தை அனுப்புவதற்குத் தாமதிக்க வேண்டாம். சான்றுகளைப் பின்னர் அனுப்பலாம். ஆனால் 4 வாரங்களுக்குள் அனுப்பவேண்டும்.

*ஆகவே, உங்களின் "ஏழு அற்புதமானவைகளைப் பெற்றுவிட்டீர்களா"?*

**சான்றாக நாங்கள் எவற்றை ஏற்றுக்கொள்ள முடியும் என்பது பற்றிய தகவலுக்குத் தயவுசெய்து மறு பக்கத்தைப் பார்க்கவும்.**

**Housing & Council Tax Benefits**

**Newham - a place where people choose to live**

Newham

WORKING FOR YOU